# வாழ்விக்கும் வைணவம்


**ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி**

18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011

Phone: 0413-2210187 Cell. 9600824414

Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com


ஸ்ரீரங்கராஜஸ்தவம் என்று ஒரு வைணவ பக்தி நூல் உண்டு. உடையவருக்கு வாரிசாக இருந்து எம்பெருமானார் தரிசனத்தை கட்டிக் காத்து நிர்வாகம் பண்ணின ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்தது அது. அதில் 36–வது சுலோகம் (பூர்வசதகம்) இப்படி வருகிறது :

ஜிதபாஹ்யஜிநாதிமணி ப்ரதிமா:
அபி வைதிகயந்நிவ ரங்கபுரே,
மணிமண்டபவப்ரகணாந் விததே
பரகாலகவி: ப்ரணமேமஹிதாந்.

இதன் பொருள் "திருமங்கைமன்னன், (தம்மால்) ஜயிக்கப்பட்ட வேத பாஹ்யர்களான ஜைநர் முதலானவர்களின் ஸ்வர்ண விக்ரஹங்களையும், வைதிகங்களாகச் செய்பவர் போன்று திருவரங்க மாநகரில் சிறந்த திருமண்டபங்களையும் திருமதிள்களையும் நிர்மாணம் செய்தார். அந்த மண்டப ப்ராகாரங்களை வணங்கக் கடவோம்," என்பதாகும்.

'எம்மதமும் சம்மதம்' என்ற கொள்கை உள்ள இந்தியாவில், திருமங்கையாழ்வார் சமண மதத்தை எதிர்த்த காரணம், அதுவும் பௌத்தமும் வைதிக மதத்தை விழுங்கி ஏப்பம் விட்டுவிடுமோ என்று அஞ்சக் கூடிய ஒரு காலகட்டம் வந்தது. சாம்ராட் அசோகன் காலத்திலே பாரதம் முழுவதும் பௌத்தம் பரவி இருந்தது. பூணூல்களும் சிகைகளும் அறுத்து எறியப்பட்டன. மொட்டைத் தலைகளே எங்கும் காட்சியளித்தன. திகம்பர சந்யாசிகளும் தீர்த்தங்கர வழிபாடு செய்யும் சமணர்களும் நாடெங்கும் காணப்பட்டார்கள். அதனால் தான் வாளை உறையில் இடாத திருமழிசை ஆழ்வாரும் வாளைக் கையிலோங்கிய பரகாலனும் சமண பௌத்தங்களை எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று. 7000 சமணர்கள் கழுவேறிய கதை சைவ நாயன்மார்கள் வரலாற்றிலும் காணலாம். திருமங்கையாழ்வார் இப்படி அதிரடி நடவடிக்கை எடுக்கவில்லை யென்றால் வைதிகம் நலிந்து போயிருக்கும்.

பாஷண்ட மதங்கள் என்று ஒரு சொற்றொடர் உண்டு. வேத தூஷணமான வைதிக விரோதமான மதங்களைக் குறிக்கும் சொற்றொடர் இது. சமணபௌத்த சமயங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட இந்தச் சொற்றொடர் இன்று மறுபடியும் பயனுக்கு வரவேண்டி இருக்குமோ என்ற அச்சநிலை இன்று நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது. மேல் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்து, அரசாட்சியின் ஆதிக்க உதவியினால் பாரதத்தில் வேரூன்றிய இஸ்லாமும், கிறிஸ்துவமும் சாதி சமத்துவம் என்ற பெயரால் இந்து சமயத்தை கரையான்கள் போல அரித்துத் தின்று கொண்டிருக்கின்றன. இந்துப் பெற்றோருக்குப் பிறந்து இந்துக்களின் பக்க பலத்தினால் வாழ்வில் உயர்வடைந்த ஆட்சியாளர்கள் கூட இந்த வேற்று மதங்களுக்குச் சாதகமான சட்டங்களைத் தீட்டுவதும், வைதிகத்துக்குப் பாதகமான ஆணைகளைப் பிறப்பிப்பதுமாக இருக்கிறார்கள். முடியாட்சி இருந்த காலத்தில் நம் நாட்டை ஆண்ட மன்னர்கள் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து சதவிகிதம் வைதிகச் சார்புள்ளவர்களாகவே செயல்பட்டார்கள். 'மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் தம் கொள்கைப்படி வாழட்டும். அவர்களுக்கு எந்த பயமும் வேண்டாம்,' என்றவளவில் நினைத்தார்களே தவிர இந்து மதத்துக்கு பாதகம் ஏற்படுத்தியாவது மற்ற மதங்களை வாழ்விக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. இன்று அப்படிப்பட்ட நினைவுகள் கோலோச்சுகின்றன. எம்மதமும் சம்மதம் என்பதற்குப் பொருள் சகிப்பு தன்மையா அல்லது இந்து மதத்தை குழி தோண்டி புதைத்தலா என்பது தீவிரமான கேள்விக்குறியாகி நம்முன்னே நர்த்தனமாடுகிறது.

கோவில் உண்டியல்களில் பக்தர்கள் காணிக்கை போடும்போது அந்தந்த தெய்வத்தின் கைங்கரியத்துக்காகத் தான் என்று நினைத்துத் தான் போடுகிறார்கள். அந்த உண்டியலில் அரசாங்கம் கைவைக்கும் என்றோ, 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று சொல்லிக் கொண்டு அந்தப் பணத்தை அரசு ஆன்மிகமல்லாத வேறு வழியில் செலவிடும் என்றோ. நினைத்துப் போடுவதில்லை. இந்து மதத்துக்கு நேர் விரோதமான கோட்பாடுகளை உடைய இஸ்லாத்தில் உறுப்பினர்களாய் இருப்பவர்கள் தாங்கள் ஹஜ்ஜுக்கு போவதற்கு இந்திய அரசு பணம் உதவ வேண்டும் என்று எதிர்பார்ப்பதோ அவர்களுக்கு இந்துக்களின் பணம் கொடுக்கப்படுவதோ உண்டியலில் காசு போடுபவர்களுக்குத் தெரியாது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை இந்தியச் சரித்திரத்தில் இந்த நாட்டை இந்து மன்னர்கள் தான் ஆண்டு வந்திருக்கிறார்கள் (சில பௌத்த சமண மன்னர்களைத் தவிர) அவர்கள் வைதிகத்துக்கு சாதகமாக இருந்ததோடு வைதிக வளர்ச்சிக்கு விரோதமாக எந்த வகையினும் செயல்பட வில்லை என்பது சரித்திர உண்மை. எவ்வளவோ அந்நிய மதங்களின் ஆதிக்கத்தை இந்த நாடு சந்தித்திருந்த போதும் இந்த நாட்டில் இன்றும் எண்பது சதவிகிதத்திற்கு மேல் இந்துக்கள்தான் வாழ்கிறார்கள். பெரும்பான்மை அடிப்படையில் பார்த்தால் அதாவது ஜனநாயகக் கண்ணோட்டத்தில் பார்த்தால் இந்த நாடு இன்றும் இந்துக்களின் நாடுதான். அப்படியிருக்க சர்வமத சமரசம் என்ற பெயரில் இந்து மதத்தை மொட்டையடித்து மற்ற மதங்களை மறைமுகமாக வளர்த்து விடுவது எந்த அரசுக்கும் நியாயமல்ல. பாடப் புத்தகங்களிலே இந்த உலகம் எப்படித் தோன்றியது என்ற விஞ்ஞான வரலாற்றுப் பகுதியில் நாத்திக வாதங்கள் தான் இடம் பெறுகின்றன. பள்ளியில் பயிலும் சிறார்களுக்கு இந்துமதத்தின் பெருமை உணர்த்தப்படுவதில்லை.

கான்வென்ட்டுகளில் படிக்கும் இந்துக் குழந்தைகளுக்கு மறைமுகமாக கிறிஸ்துவ மதம் போதிக்கப்படுகிறது. அந்தப் பிஞ்சு மூளைகளுக்குள் பாஷண்டமதம் திணிக்கப் படுகிறது. மேல்நாட்டு மோஹத்தினால் கண் மறைக்கப்பட்ட பெற்றோர்கள் ஒருபுறம், மதத்தைப் பரப்பும் வேகம் கொண்ட கான்வென்ட்டுகள் ஒருபுறம் என்று எதிர்கால சந்ததியினரின் வைதிக வாழ்க்கை "இருபக்கமும் மத்தளத்துக்கு அடி" என்பது போல் சிதைந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. இதை எடுத்துக் கூறி எச்சரிப்பவனுக்கு 'மதவெறியன்' என்று பட்டம் அளிக்கப்படுகிறது.

பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படுகிறோம். வருமானத்தைப் பற்றி கவலைப்படுகிறோம். பெண் குழந்தைகளின் வரதட்சணைக்காகப் பணம் சேர்க்கிறோம். நாகரீகமான சமூகம் என்று பெயர் பெறுவதற்காக அல்லல் படுகிறோம். ஆனால் நம்மை ஊட்டி வளர்த்து உருவாக்கிய வைதிக மதத்தை, வைணவத்தைப் பரப்ப நாம் என்ன செய்கிறோம்? ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஸ்ரீராமானுஜர் நேரில் வந்து ஆவன செய்வார் என்று எதிர்பார்க்கிறார்களா? வேதங்களையும் வேத நாராயணனையும் வணங்காமல்தான் நம் பரம்பரை இன்றுவரை செழித்ததா? வைதிகம் காட்டிய வழியிலே வந்ததனால் தான் நம் முன்னோர்களும், நம்நாடும் இன்றுவரை இந்த உலகுக்கு ஒளிகாட்டும் தீபங்களாக இருந்திருக்கிறார்கள்.

ஆலமரத்திற்கு ஆணிவேர் எப்படியோ, சிட்டுக் குருவிக்குச் சிறகுகள் எப்படியோ அப்படித்தான் இந்தியாவின் செழிப்புக்கு வைதிகமும் வைணவமும். இந்த ஜீவநாடிகள் இல்லையென்றால் சிதைந்து போகும் இந்தியா. சிதறிப் போகும் நம் செழிப்பு. நம்வாழ்வின் ஒவ்வொரு பரிமாணத்திலும் – அரசியல் உள்பட – ஆன்மீகம் செழிக்க வேண்டும். சகிப்புத் தன்மை என்ற பெயரால் பிற மதங்களையும், பிற மதங்களை ஆதரிக்கும் ஆட்சி முறையையும் அரவணைத்தது போதும்! நமக்கென்று சுய சிந்தனை உண்டு. அதைப் பயன்படுத்தி வைதிகம் கொழிக்கும் தேசமாக இதை மாற்றுவோம்! நமக்குப் பதிலாக இதைச் செய்ய திருமங்கை மன்னும் திருமழிசை ஆழ்வாருமா குதித்து வர வரவேண்டும்?